# பெரியாழ்வார் திருமொழி 3-8
## நல்லதோர் தாமரை

(தலைமகனுடன் சென்ற தலைமகளைக் குறித்து தாய் பலபடி வருந்திக் கூறும் பாசுரம்)

297 * நல்லதோர் தாமரைப் பொய்கை * நாண்மலர் மேல் பனி
சோர *
அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு * அழகழிந்தால் ஒத்ததாலோ **
இல்லம் வெறியோடிற்றாலோ * என் மகளை எங்கும் காணேன் *
மல்லரை அட்டவன் பின் போய் * மதுரைப் புறம் புக்காள்
கொலோ (1)

298 ஒன்றும் அறிவொன்றில்லாத * உருவறைக் கோபாலர் தங்கள் *
கன்றுகால் மாறுமா போலே * கன்னியிருந்தாளைக் கொண்டு **
நன்றும் கிறி செய்து போனான் * நாராயணன் செய்த தீமை *
என்றும் எமர்கள் குடிக்கு * ஓரேச்சுக்கொல் ஆயிடுங்கொலோ (2)

299 குமரி மணம் செய்து கொண்டு * கோலம் செய்து
இல்லத்திருத்தி *
தமரும் பிறரும் அறியத் * தாமோதரற்கென்று சாற்றி **
அமரர் பதியுடைத் தேவி * அரசாணியை வழிபட்டு *
துமிலமெழப் பறை கொட்டித் * தோரணம் நாட்டிடுங்கொலோ (3)

300 ஒரு மகள் தன்னை உடையேன் * உலகம் நிறைந்த புகழால் *
திருமகள் போல வளர்த்தேன் * செங்கண்மால் தான் கொண்டு
போனான் **
பெருமகளாய்க் குடி வாழ்ந்து * பெரும் பிள்ளை பெற்ற
அசோதை *
மருமகளைக் கண்டுகந்து * மணாட்டுப்புறம் செய்யுங்கொலோ (4)

301 தம்மாமன் நந்தகோபாலன் * தழீ இக்கொண்டு என்மகள்
தன்னை *
செம்மாந்திரேயென்று சொல்லிச் * செழுங்கயற் கண்ணும்
செவ்வாயும் *
கொம்மை முலையும் இடையும் * கொழும்பணைத் தோள்களும்
கண்டிட்டு *
இம்மகளைப் பெற்ற தாயர் * இனித்தரியார் என்னுங்கொலோ (5)

302 வேடர் மறக்குலம் போலே * வேண்டிற்றுச் செய்து என்மகளை *

கூடிய கூட்டமேயாகக் * கொண்டு குடி வாழுங்கொலோ **
நாடும் நகரும் அறிய * நல்லதோர் கண்ணாலம் செய்து *
சாடிறப் பாய்ந்த பெருமான் * தக்கவாகைப் பற்றுங்கொலோ (6)

303 அண்டத்தமரர் பெருமான் * ஆழியான் இன்று என்மகளை *
பண்டப் பழிப்புக்கள் சொல்லிப் * பரிசற ஆண்டிடுங்கொலோ **
கொண்டு குடி வாழ்க்கை வாழ்ந்து * கோவலப் பட்டம் கவித்து *
பண்டை மணாட்டிமார் முன்னே * பாதுகாவல் வைக்குங்கொலோ (7)

304 குடியில் பிறந்தவர் செய்யும் * குணமொன்றும் செய்திலன்
அந்தோ *
நடையொன்றும் செய்திலன் நங்காய் * நந்தகோபன் மகன்
கண்ணன் **
இடை இருபாலும் வணங்க * இளைத்திளைத்து என்மகள்
ஏங்கி *
கடை கயிறே பற்றி வாங்கிக் * கை தழும்பேறிடுங்கொலோ (8)

305 வெண்ணிறத்தோய் தயிர் தன்னை * வெள்வரைப்பின் முன்
எழுந்து *
கண்ணுறங்காதே இருந்து * கடையவும் தான் வல்லள்
கொலோ **
ஒண்ணிறத் தாமரைச் செங்கண் * உலகளந்தான் என்மகளை *
பண்ணறையாப் பணிகொண்டு * பரிசற ஆண்டிடுங்கொலோ (9)

306 * மாயவன் பின் வழி சென்று * வழியிடை மாற்றங்கள் கேட்டு *
ஆயர்கள் சேரியிலும் புக்கு * அங்குத்தை மாற்றமுமெல்லாம் **
தாயவள் சொல்லிய சொல்லைத் * தண்புதுவைப் பட்டன்
சொன்ன *
தூய தமிழ்ப் பத்தும் வல்லார் * தூமணி வண்ணனுக்காளரே (10)